<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

<u>எம்சிஓபி. நெ.426/2017 (430/2017,432/2017)</u>

2023 ம் ஆண்டு 13.04.2023 எம .சா.1
சாட்சியின் சாட்சியம் திரு.எஸ். நாகராஜன், எம்,எல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் அரசு பேருந்து பதிவு எண்.டிஎன் 58 என் 2265 என்ற பேருந்தின் ஓட்டுனர் நான்தான். நான் மதுரையிலிருந்த கோவை சென்றேன். அப்போது கோவையிலிருந்து வந்த மாருதி 800 கார் பாதை மாறி வலதுபுறமாக வந்து என் பேருந்தின் இடதுபுறமாக மோதினார்.

<u>குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்</u>

விபத்தில் ஓட்டுனர் உட்பட 4 பேர் காரில் பயணித்தவர்கள் இறந்தார்கள் என்றால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார்கள். காரை ஓட்டி வந்த நபர் இறந்து விட்டார் என்றால் ஆமாம். காரை ஓட்டி வந்த பூவண்ணன் சரியான திசையில் ஓட்டி வந்தார் என்றும், நான்தான் அஜாக்கிரதையாக வலதுபுறம் ஏறிச்சென்று காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. என் செல்வாக்கை பயன்படுத்தி கார் ஓட்டுனர் மீது வழக்கு பதிந்தேன் என்றால் சரியல்ல. காரின் ஓட்டுனர் இறந்து விட்டதால் அதை சாதமாக கொண்டு வழக்கு திந்துள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு கோரி மனுதாக்கல் செய்தவர்கள் காரில் பயணித்தவர்களின் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் அரசு போக்குவரத்து கழகத்தை பொறுத்து 3ம் தரப்பினர் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீடை போக்குவரத்து கழகம் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ எஸ். நாகராஜன்
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தாராபுரம்